## 2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 17.4.2026 அன்று, காங்கேயம், உடுமலை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, கோவை தெற்கு, குன்னூர், மேட்டுப்பாளையம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு :



● காங்கேயம் பேருந்து நிலையம் பகுதியில், காங்கேயம் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர், கழகத் துணைப் பொதுச்செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களையும், தாராபுரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், மருத்துவர் இந்திராணி அவர்களையும் ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.







● உடுமலைப்பேட்டை புதிய பேருந்து நிலையம் பகுதியில், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் மு.ஜெயக்குமார் அவர்களுக்கும் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணன் அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.



● பொள்ளாச்சி ஊஞ்சவேலம்பட்டி பகுதியில், வால்பாறை சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் ஆ.சுதாகர், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியின் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் வேட்பாளர் கே.நித்தியானந்தன், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் மு.ஜெயக்குமார் ஆகியோரை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.







● வெள்ளலூர் பேருந்து நிலையம் மற்றும் மலுமிச்சம்பட்டி நான்கு வழிச்சாலை பகுதிகளில், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் அவர்களை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.





● கோவை காந்திபுரம் பி.கே.கே.மேனன் சாலைப் பகுதியில், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன், கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆகியோரை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.



● கோத்தகிரி ஜான்சன் ஸ்கொயர் காமராஜர் சிலை பகுதியில், குன்னூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் கே.எம்.ராஜு அவர்களை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.





● மேட்டுப்பாளையம் அபிராமி தியேட்டர் பகுதியில், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் அவர்களை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.

